

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 11.02.2026


# போலி விவசாயியின் பொய்கள்!

**பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு பச்சைப் பொய்களைச் சொல்வது பழனிசாமிக்கு வழக்கம். 'நானும் விவசாயிதான்' என்று சொல்லியபடியே உழவர் பெருமக்களுக்கு துரோகங்களை இழைத்ததுதான் அவரது துரோக வரலாறு ஆகும். தனது ஆட்சி காலத்தில் செய்த துரோகங்களை மக்களும் உழவர்களும் மறந்திருப்பார்கள் என்று நினைத்து இரண்டு நாட்களுக்கு முன்னால் பச்சைத் துண்டைப் போட்டுக் கொண்டு அதே பழைய பொய்களை அவிழ்த்து விட்டுள்ளார் பழனிசாமி.**

காவிரி நீர் உரிமையைத் தான் காப்பாற்றியதாகவும், தான் தொடங்கிய 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தை தி.மு.க. அரசு கைவிட்டதாகவும் பழனி சாமி சொல்லி இருக்கிறார்.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதியில்தான் காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு முழுநேரத் தலைவர் நியமிக்கப்பட்டார். 2018 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளாக முழுநேரத் தலைவர் நியமிக்கவே இல்லை. நியமிக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு அடம்பிடித்தது. அதனைத் தட்டிக் கேட்காமல் பழனிசாமியின் அரசு தலையாட்டிக் கொண்டுதான் இருந்தது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு 5.2.2007 அன்று வந்தது. அப்போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியே இருந்தது. இந்த இறுதித் தீர்ப்பில் தமிழகத்தின் பாசனப் பரப்பு 4,56,130 ஏக்கர் விடுபட்டு இருந்தது. இதனைக் கழக அரசு கடுமையாக எதிர்த்தது. உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினார் முதல்வர் கலைஞர். அ.தி.மு.க.வும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. காவிரி பாசன விவசாயிகளின் பாரம்பர்ய உரிமையைக் காக்க காவிரி மன்ற இறுதித் தீர்ப்பில் கூடுதலாக 60 டி.எம்.சி. நீர் கோரி 2007 ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிறப்பு முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு 2017 ஆம் ஆண்டு ஜூலை 10, செப்டம்பர் 20 ஆகிய இரண்டு நாட்களும் விசாரணை நடந்தது. இங்கு தான் பழனிசாமி அரசின் கையாலாகாத் தனம் வெளிப்பட்டது. சரியான வாதங்களை வைத்து அரசு வாதாடவில்லை.

**"தமிழக அரசின் மனுவில் என்ன சொல்லப்பட்டு இருந்ததோ அதைக் கூட நீதிமன்றத்தில் சொல்லி வாதங்களை வைக்கவில்லை. தமிழக அரசின் வழக்கறிஞர் பேசுவதும், மனுவில் உள்ளதும் வேறு வேறாக இருக்கிறதே" என்று நீதிபதிகளே சொன்னார்கள். இப்படி அலட்சியமாக வழக்கை நடத்திய அரசுதான் அ.தி.மு.க. அரசு. இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு, 'காவிரி காப்பாளர்' என்ற பட்டத்தை தனக்குத் தானே கொடுத்துக் கொண்டார் பழனிசாமி.**

அவர் உண்மையான விவசாயியாக இருந்தால் வேளாண்மையைச் சிதைக்கும் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரிப்பாரா? விவசாயிகள் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் போராடினார்கள். அவர்களை புரோக்கர்கள், என்றவர்தான் பழனிசாமி.

இன்னொரு பொய் என்னவென்றால், "டெல்டா மாவட்டத்து மக்கள் இயற்கைச் சீற்றத்தால் பல்வேறு சோதனைகளைச் சந்தித்த போதெல்லாம் நேசக்கரம் நீட்டிய ஒரே இயக்கம் அ.தி.மு.க." என்றும் சொல்லி இருக்கிறார் பழனிசாமி.

2018 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதியன்று இணையத்தில் ஒரு வீடியோ வைரல் ஆனது. அதனை பழனிசாமி எடுத்து பார்க்க வேண்டும். சுவர் ஏறி தப்பி ஓடினார் பழனிசாமியின் ஆட்சியில் அமைச்சராக இருந்த ஓ.எஸ்.மணியம்.

**புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதிகளைப் பார்வையிட வருகை தரும் அ.தி.மு.க. அமைச்சர்கள் அனைவரையும் மக்கள் கோபமாக எதிர்த்தார்கள். வேதாரண்யம் வேட்டைக் காரனிப்பு பகுதிக்கு அ.தி.மு.க. அமைச்சர் ஓ.எஸ். மணியம் வந்தபோது, மக்கள் அடிக்க வந்தார்கள். சுவர் ஏறிக் குதித்து ஓ.எஸ்.மணியம் தப்பி ஓடினார். இவர் தப்பி ஓடும் போது, பின்னால் ஓடியவாறு ஒருவர் தனது செல்போனில் வீடியோ எடுத்தார். அமைச்சர் ஓ.எஸ்.மணியத்தை அந்த நபர், துரத்தியபடியே போய் வீடியோ எடுத்தார். தனது காரை விட்டுவிட்டு இரு சக்கர வாகனத்தில் ஓ.எஸ்.மணியன் ஓடியதை அன்று தமிழ்நாடே பார்த்தது. 'நேசக்கரம் நீட்டியதாக' இப்போது பேட்டி தரும் பழனிசாமி, அந்தக் காட்சிகளை மீண்டும் ஒரு முறை பார்க்கட்டும்.**

நீலகிரி மாவட்டமே இயற்கை பேரிடரால் பெரும் பாதிப்பு ஏற்பட்டபோது ஒரே ஒரு அமைச்சரை மட்டும் அவசர அவசரமாக அனுப்பி வைத்தார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி. அவரும் வந்ததும் தெரியாமல் போனதும் தெரியாமல் வந்து போனார். முதலமைச்சர் பழனிசாமி ஏன் வரவில்லை என்று தி.மு.க. கேள்வி எழுப்பியது. அதன்பிறகு ஒரு நாள் வந்தார் பழனிசாமி . அதுவும் ஹெலிகாப்டரில் வந்தார். சில இடங்களில் சில மணி நேரம் பார்த்துவிட்டுப் போய்விட்டார். பழனிசாமியின் நேசக் குணம், அவ்வளவுதான்.

**விவசாயிகளுக்கான பி.எம். கிசான் திட்டத்தில் ஊழல் நடந்தது அ.தி.மு.க. ஆட்சியில். கேட்டால் ஒப்பந்த ஊழியர்கள் செய்து விட்டார்கள் என்று திசை திருப்பினார்கள். விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிதியை "போலி விவசாயிகளுக்கு" கொடுத்தது பழனிசாமி.**

**நெல் கொள்முதல் நிலையங்களில் ஊழல் நடந்ததாக உயர்நீதிமன்றமே கண்டித்தது. விவசாயிகளுக்கான நீர்ப்பாசன கால்வாய்களைத் தூர் வாருவதில் ஊழல். விவசாயிகளுக்கான பி.எம். கிசான் திட்டத்தில் ஊழல். விவசாயிகளின் நீர் ஆதாரத்திற்கான குடிமராமத்து பணிகளிலும் ஊழல். இது தான் போலி விவசாயி பழனிசாமியின் ஆட்சியாகும்.**

'விவசாயிகள் கடனை ரத்து செய்ய மாட்டேன்" என்று சொல்லி உச்சநீதி மன்றம் வரை போனவர்தான் பழனிசாமி. மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிராக போராடிய விவசாயிகளை ஒடுக்கியவர்தான் இந்த பழனிசாமி.வேளாண் மண்டலம் என்பதை போலியாக அறிவித்து, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஹைட்ரோகார்பன் திட்டங்கள் செயல்படும் என்ற சதி செய்தவர் தான் இந்த பழனிசாமி.

**இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து சாயம் போன பழைய துண்டு போட்டுக் கொண்டு அதே பழைய பொய்களை அவிழ்க்கிறார் பழனிசாமி.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.2.2026) சென்னை, மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இந்திய கிறிஸ்துவ உயர்கல்வி சங்கம் (All India Association for Christian Higher Education) மற்றும் மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி (Women's Christian College) இணைந்து நடத்திய நன்றி தெரிவிக்கும் விழாவில், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவியர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்

# பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு தகவல்!



திருக்கோவிலூர், பிப்.11 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ரிஷிவந்தியம் சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட கூவனூர் கிராமத்தில் கூவனூர் சாங்கியம், பிள்ளையார்பாளையம் ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே புதிய தாகக் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த் தலைமையில், பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறுது றைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 8.2.2026 அன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ரிஷிவந்தியம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள், அந்த வகையில் ரிஷிவந்தியம் சட்ட மன்றத் தொகுதி கூவனூர் கிராமத்தில் சுற்றுவட்டாரப் பொதுமக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் நெடுஞ்சாலைத் துறை, நபார்டு மற்றும் கிராமசாலைககள் கோட்டம் சார்பில் நபார்டு திட்டத்தின்கீழ் கூவனூர் சாங்கியம், பிள்ளையார்பாளையம் கிராமங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.25.20 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலம் இன்றைய தினம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பாலத்தை கூவனூர் மற்றும் சாங்கியம் கிராமங்களுடன் இணைக்கும் கூவனூர் சாங்கியம் சாலை, சாங்கியம் கூவனூர் சாலை, இணைப்பு சாலை ஆகிய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் சாலை மற்றும் பாலம் 2900 மீ. நீளத்தில் ரூ.29.37 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. கூவனூர் மற்றும் சாங்கியம், பிள்ளையார்பாளையம் கிராமத்திற்கு இடையே செல்லும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் வசதி இல்லாததால் சுமார் 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 24,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பல்வேறு பணிகளுக்குச் செல்ல 11 கி.மீ. தூரம் மாற்றுவழியில் செல்ல வேண்டியிருந்தது.

தற்பொழுது கட்டப்பட்ட உயர்மட்டப் பாலம் மற்றும் சாலையின் மூலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு மழைக்காலங்களில் போக்குவரத்து தங்குதடையின்றி செல்வதற்கும், கூவனூரில் அமைந்துள்ள பழமையான சிவன்கோவில், மற்றும் ஆன்மீகத் தளங்களான திருக்கோவிலூர், ஆதித்திருவரங்கம், திருவண்ணாமலை ஆகிய நகரங்களுடன் இணைக்கும் முக்கிய சாலை வழித்தடமாகவும் இது அமைந்துள்ளது.

இதனை சுற்றுவட்டாரப் பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும்.

ரிஷிவந்தியம் பகுதிக்குட்பட்ட இந்த கூவனூர் பகுதியில் மட்டும் இது வரை சுமார் ரூ.50 கோடிக்கு பணிகள் நடைபெற்றுள்ளது. மணலூர் பேட்டையில் சுமார் ரூ.75 கோடி மதிப்பீட்டில் தடுப்பணைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பகுதியில் உள்ள திருக்கோயிலை புனரமைத்து, தேரினை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதேபோன்று ஆதிதிருவரங்கம் கோயில் புனரமைக்கப்பட்டு திருக்குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஜம்பை ஈஸ்வரர் திருக்கோவில், ரிஷிவந்தி யம் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில், ராவுத்த நல்லூர் ஆஞ்நேயர் திருக்கோவில் உள்ளிட்ட பல திருக்கோவில்கள் புனரமைக்கப்பட்டு, திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

மேலும் வாணாபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது. ரிஷிவந்தியம் தனி ஒன்றியமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, இப்பகுதி பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் பொதுமக்கள் நினைவு கூர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இப்பகுதி மக்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டுமென அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத்துறை, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் தலைமைப் பொறியாளர் ப.செந்தில், கண்காணிப்புப் பொறியாளர் பி.பரந்தா மன், கோட்டப்பொறியாளர் சே.சேதுபதி, உதவிக் கோட்டப் பொறியாளர் எம்.மாரிமுத்து, பொதுப் பணித்துறை சிறப்பு அலுவலர் ஆர்.சந்திரசேகரன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் இரா.புவனேஷ்வரி பெருமாள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்!

# இராமநாதபுரம் - சிவகங்கை மாவட்டங்களில் கருத்துக்கேட்புக் கூட்டம்!

இராமநாதபுரம், பிப்.11 -

சட்டமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் கருத்துக்கேட்பு கூட்டம் இராமநாதபுரத்தில் நடைபெற்றது.

இதில், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தேர்தல் அறிக்கையில் சேர்க்க கோரி கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

2026 சட்டமன்றத் தேர்தல் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று தேர்தல் அறிக்கையில் சேர்க்க வேண்டிய அம்சங்கள் குறித்து கருத்து கேட்டு வருகிறார்.

அதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த வணிகர் சங்கம், மீனவ சங்கம், விவசாயிகள் சங்கம், பல்வேறு அமைப்புகள் சங்கம், இந்து, இஸ்லாம், கிறித்துவ அமைப்புகள், மகளிர் மன்றம், மீனவ மகளிர் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் இராமநாதபுரம் தனியார் மகாலில் நடைபெற்றது.

இதில், கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழுவினர் அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடம் கருத்துக்களை கேட்டும் அதனை மனுவாகவும் பெற்றார்கள்.

இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில், டி.கே.எஸ். இளங்கோவன், சுரேஷ் சம்மந்தன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார், முன்னாள் எம்.பி. எம்.எம்.அப்துல்லா, முன்னாள் அமைச்சர்கள் அன்வர் ராஜா, சுந்தராஜன், சத்திய மூர்த்தி, பரமக்குடி சட்டப் பேரவை உறுப்பினர் முருகேசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்இன்பா ஏ. என். ரகு ஆகியோர் கலந்துகொண்டு கோரிக்கை கேட்டறிந்து மனுக்களை பெற்றுக் கொண்டனர்.





இராமநாதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தலைமைக் கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. எம்.எம்.அப்துல்லா, சுரேஷ் சம்பந்தன், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பவானி ராஜேந்திரன், செ.முருகேசன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் அன்வர் ராஜா, சத்தியமூர்த்தி, சுந்தரராஜன், இன்பா ஏ.என். ரகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.